CC 39/2017

18.08.2023

அ.சா.2

பெயர்: சந்தோஷ்

த/பெ. முருகன்

அ.சா.2 கு.ப.ம.எண். 7000/2021-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 Present.

A3, A4 absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் அனைவரும் என் பக்கத்து வீட்டில் குடியிருப்பவர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது என் தாயார் எதிரி விஜயா வீட்டின் முன்பாக மழைத் தண்ணீர் போகுமாறு அணை போட்டுவைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி தண்ணீர் விஜயா வீட்டிற்குள் சென்றதால் அது குறித்து சம்பவத்தன்று காலை விஜயா என் அம்மாவிடம் கேட்டார்கள். அதன் பொருட்டு எதிரிகளுக்கும் என் தாயாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஆகிவிட்டது. மேற்படி சம்பவ சமயத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரிதான்.

அடுத்த நாள் சம்பவத்தை கேள்விபட்டு நான் எதிரிகளிடம் போய் கேட்டேன். அப்போது நான் விஜயா தரப்பினருடன் சண்டையிட்டதால் விஜயாவிற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகள் புகார் கொடுத்து முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் என் அம்மாஎதிரி தரப்பினரை அடித்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ரூ.1000/- அபராதம் செலுத்தினார்கள் என்றால் சரிதான்.

நானும் என் தாயாரும் எங்கள் மீது பதிவு செய்த முதல் தகவலறிக்கையை எதிர்த்து முன் ஜாமீன் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விஜயா மற்றும் தீபிகாவை அடித்து மானபங்கப்படுத்தியதாக முதல் தகவலறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நானும் குற்றத்தை ஒப்புக்கொண்டு காவல்நிலையத்தில் அபராதம் கட்டினேனா என்றால் சரியல்ல. என் மீது போடப்பட்ட வழக்கு குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி பிரச்சனை சம்பந்தமாக எங்கள் 8 வது வார்டு கவுன்சிலர் வசந்த் என்பவரிடம் பஞ்சாயத்து பேசச் சென்றோம் என்றால் சரிதான்.

மேற்படி பஞ்சாயத்தில் நாங்கள் இரு தரப்பினரும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும் அது பற்றி காவல்நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று கேட்டுகொண்டோம் என்றால் சரிதான். உண்மை விபரங்களை எல்லாம் காவல்நிலையத்தில் கூறி அன்றைய தினம் இருந்த காவல் ஆய்வாளரிடம் தெரிவித்தோம் என்றால் சரிதான். வேண்டுமென்றே எதிரிகளை பழி வாங்கும் நோக்கத்தில் எதிரிகளுக்கு எதிராக முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr. E.Pragasam)

Judicial Magistrate No. II,
Pollachi.

CC 39/2017

18.08.2023

அ.சா.3

பெயர்: சூரியா

த/பெ. முருகன்

அ.சா.3 கு.ப.ம.எண். 7000/2021-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 Present.

A3, A4 absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் அனைவரும் என் பக்கத்து வீட்டில் குடியிருப்பவர்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது என் தாயார் எதிரி விஜயா வீட்டின் முன்பாக மழைத் தண்ணீர் போகுமாறு அணை போட்டுவைத்திருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி தண்ணீர் விஜயா வீட்டிற்குள் சென்றதால் அது குறித்து சம்பவத்தன்று காலை விஜயா என் அம்மாவிடம் கேட்டார்கள். அதன் பொருட்டு எதிரிகளுக்கும் என் தாயாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி சம்பவ சமயத்தில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். சம்பவம் முடிந்த பின்புதான் நான் எனது வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான்..

போலிசார் விசாரணையிலும் நான் மேற்படி விபரத்தைதான் கூறினேன். மேற்படி பிரச்சனை சம்பந்தமாக எங்கள் 8 வது வார்டு கவுன்சிலர் வசந்த் என்பவரிடம் பஞ்சாயத்து பேசச் சென்றோம் என்றால் சரிதான், ஆனால் நான் செல்லவில்லை, என் தாயாரும் என் தம்பி சந்தோஷம் சென்றார்கள். அதன் பின்னிட்டு காவல்நிலையத்தில் சமாதானம் பேசும்போது நான் இருந்தேன். எனது தாயாரும் என் தம்பியும் புகாரின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்பந்தமாக எனது தாயார் நீதிமன்றத்தில் ரூ.1000/- தண்டம் செலுத்தினார் என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே எதிரிகளை பழி வாங்கும் நோக்கத்தில் எதிரிகளுக்கு எதிராக முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi.